அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 04/94

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 07
1994, ஜனவரி மாதம் 22 ஆந் திகதி.

எல்லாச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

அரசாங்க விடுமுறை பங்களாக்களை ஒதுக்கும் முறை,
கட்டணங்களை அறவிடும் முறையைத் திருத்துதல்.

அரசாங்க விடுமுறை பங்களாக்களை ஒதுக்கும் முறை, கட்டணங்களை அறவிடுதல், கட்டணங்களை அறவிடும் முறை 1994 ஜனவரி மாதம் 01ஆந் திகதி தொடக்கம் கீழ்வருமாறு திருத்தப்படுகின்றது.

02. விடுமுறை பங்களாக்களை ஒதுக்குதல்:-

2.1 விடுமுறை பங்களாவை விண்ணப்பதாரருக்கு ஒதுக்க இயலுமா என்பதைத் தாபனப் பணிப்பாளரைக் கேட்டு உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

குறிப்பிட்ட கட்டணத்தை அரசாங்க நிருவாக அமைச்சின் தலைமைக் கணக்காளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

கட்டணம் செலுத்தப்பட்டதற்கான பற்றுச் சீட்டைத் தாபனப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்து பங்களாவை ஒதுக்கியதற்கான கடிதத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

..6

2.11 விடுமுறை பங்களாக்களை ஒதுக்குதல் தொடர்பாகத் தாபன விதிக்கோவையின் XX வது அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு உங்கள் கவனம் கோரப்படுகின்றது.

டிசம்பர்/ஜனவரி, ஏப்ரல்/மே, ஆகஸ்ட்/செப்டம்பர் மாதங்களில் விடுமுறை பங்களாக்கள் தொடர்பான விண்ணப்பப் பத்திரங்களைக் குறைந்த பட்சம் 03 மாதங்களுக்கு முன்பு சமர்ப்பிக்க வேண்டும்.

03. கட்டணங்கள் :-

3.1 பங்களாவை ஒதுக்கும் நிபந்தனைகளுக்கு ஏற்பத் தங்குவதற்காக நாளொன்றுக்கு அறவிடப்படும் கட்டணங்கள் கீழ்வருமாறு:-

- ∂ நுவரெலியா - ரூபா. 110.00
- ∂ தியத்தலாவ 'ஏ' - ரூபா. 100.00
- ∂ தியத்தலாவ 'பி' - ரூபா. 90.00
- ∂ பண்டாரவளை இல. 1,2 - ரூபா. 80.00

3.11 மின்சாரக் கட்டணங்கள்

நாளொன்றுக்கு நுகரப்படும் 6 அலகுகள் வரையிலான கட்டணம் நாளாந்த வீட்டு வாடகையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நுகரப்படும் மேலதிக அலகுகளுக்கு மின்சார சபையின் கட்டணங்களுக்கு இணங்கக் குறிப்பிட்ட கட்டணத்தை பங்களாவில் இருந்து வெளியேறுவதற்கு முன்பு பங்களா பொறுப்பாளருக்குச் செலுத்திப் பற்றுச் சீட்டு ஒன்றைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

3.111 தொலைபேசிக் கட்டணங்களும், சலவைக் கட்டணங்களும்

தொலைபேசிக் கட்டணங்களையும், அவ்வப்போது குறிப்பிடப்படும் சலவைக் கட்டணங்களையும் பங்களா பொறுப்பாளருக்குக் காசு மூலம் செலுத்திப் பற்றுச் சீட்டொன்றைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

04. இதற்கிணங்க தாபன விதிக்கோவையின் XX வது அத்தியாயம் திருத்தப்படும்.

ஒப்பம்: வை. பி. புஸ்ஸெதெனிய.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.